இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 28.05.2026

# விவசாயிகளை ஏமாற்றும் விஜய்!

மக்களை ஏமாற்றுவது முதலமைச்சர் விஜய்க்கு எளிமையானது. அரிதாரம் பூசி சினிமாவில் வென்றதைப் போலவே அரசியலிலும் வென்ற அவர், வெற்றிக்குப் பிறகும் மக்களை ஏமாற்றுவதை மட்டும் விடவில்லை. வாய்க்கு வந்ததை எல்லாம் வாக்குறுதிகளாக தூக்கிப் போட்டு, ஆட்சிக்கு வந்ததும் அவற்றை மறந்து விட்டார் விஜய்.

**முதல் கோணல் முற்றும் கோணல் என்பதைப் போல அவர் இட்ட முதல் கையெழுத்தே ஏமாற்றுக் கையெழுத்து ஆகும்.** இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு 200 யூனிட் வரை மின்சாரத்துக்கு கட்டணமில்லை என்று அரசாணை வெளியிட்டார் விஜய். இதுதான் அவரது முதல் கையெழுத்து ஆகும். ஆனால் தேர்தலுக்கு முன்னதாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தகுதி வாய்ந்த வீடுகளுக்கு ஒவ்வொரு மாதமும் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. தேர்தல் அறிக்கையில் சொன்னது வேறு. வெற்றி பெற்றதற்கு பிறகு செய்தது வேறு.

தமிழ்நாட்டில் ஏற்கனவே 100 யூனிட் மின்சாரம் இலவசம் என்று இருக்கிறது. அதைப் பற்றி எதுவுமே சொல்லாமல் ஏமாற்றியது விஜய் அரசு. அனைத்துத் தரப்பினரும் கடுமையான எதிர்ப்பை தெரிவித்ததும், ஏற்கனவே இருக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசம் என்ற திட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தினால் 100 யூனிட்டுக்கு கட்டணமில்லை. 500 யூனிட்டுக்குள் பயன்படுத்தினால் 200 யூனிட்டுக்கு கட்டணமில்லை என்று இப்போது சொல்லி இருக்கிறார்கள். இது விஜய் கொடுத்த வாக்குறுதி அல்ல. **'ஒவ்வொரு குடும்பத்துக்கும் 200 யூனிட்டுகள் கட்டணமில்லா மின்சாரம்'** என்பதுதான் அவரது வாக்குறுதி ஆகும். 500 யூனிட்டுக்குள், 500 யூனிட்டுக்கு மேல் என்று அவர் தனது அறிக்கையில் சொல்லவில்லை. **இது முதல் ஏமாற்று ஆகும். அதாவது முதல் கையெழுத்தே முதல் ஏமாற்று ஆகும்.**

இப்போது அடுத்ததாக ஒட்டுமொத்தமாக விவசாயிகளை ஏமாற்றி இருக்கிறார். தேர்தலுக்கு முன்னதாக விஜய் கொடுத்த வாக்குறுதி என்ன? **"5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அவர்கள் வைத்திருக்கும் பயிர்க்கடனில் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படும்"** என்று விஜய் அள்ளி விட்டார். அவரது வாக்குறுதிகளில் இதுதான் மிகப்பெரியதாகப் பேசப்பட்டது.

முதலமைச்சர் ஆனதும் விஜய் போட்டுள்ள உத்தரவில் ஒட்டுமொத்தமாக விவசாயிகள் மனதில் வேதனையை விதைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகளில் ரூ.50 ஆயிரம் வரை பயிர்க்கடன் பெற்ற குறுவிவசாயிகளுக்கு முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும். அதற்கு மேல் இருந்தால் அந்தக் கடனில் 50 விழுக்காடு வரை கடன் தள்ளுபடி செய்யப்படும்.

இந்த கடன் தள்ளுபடி திட்டமும் 2025 மே 1 முதல் 2026 பிப்ரவரி 28 வரை கடன் பெற்றவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று ஒட்டுமொத்தமாக ஏமாற்றி இருக்கிறார் விஜய்.

கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கியவர்களுக்கு மட்டும்தான் இது பொருந்தும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வாங்கியவர்களுக்கு இதுவும் பொருந்தாது. அவர்களுக்கு எந்த சலுகையும் இல்லை.

இந்த வகையில் மொத்தமே ரூ.2 ஆயிரம் கோடி தான் தள்ளுபடி செய்துள்ளார் விஜய்.

தனது ஆட்சி நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள அ.தி.மு.க. உறுப்பினர்களை பதவி விலக வைத்து தனது கட்சியில் இணைத்து கீழ்த்தரமான அரசியலை நடத்தி வருகிறார் விஜய். அவரது ஆட்சிக்கு முட்டுக்கொடுக்கும் கட்சிகளால் கூட இந்த கீழ்த்தரமான செய்கைகளை ஏற்க முடியவில்லை. எனவே **மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக பயிர்க்கடன் அறிவிப்பை விஜய் செய்துள்ளதாகவே தெரிகிறது. அதையும் முறையாகச் செய்திருந்தால் பரவாயில்லை. முழுக்க முழுக்க விவசாயிகளை ஏமாற்றி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.**

பயிர்க்கடன் தள்ளுபடி என்று சொல்லப்பட்ட அறிவிப்பு மிகமிக மோசடியானது. நிலத்தை அளவுகோலாக வைத்து பயிர்க்கடன்கள் வழங்கப்படுகிறது. ஆனால் பணத்தை அளவுகோலாக வைத்து கடன்களை தள்ளுபடி செய்வது தவறு.

தேர்தல் காலத்தில் சொல்லப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று கொந்தளித்து வருகிறார்கள் விவசாயிகள். வயலில் இறங்கி போராட்டம் நடத்தி வருகிறார்கள் விவசாயிகள். **'ஏமாற்றாதே, ஏமாற்றாதே'** என்று முழங்கி வருகிறார்கள். பாகுபாடு இல்லாமல் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மனு கொடுக்கத் தொடங்கி இருக்கிறார்கள் விவசாயிகள். அனைத்து வகை பயிர்க்கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள்.

**'நான் விவசாயி அல்ல, ஆனாலும் விவசாயிகளின் வலியைப் புரிந்தவன்'** என்று சினிமா டயலாக் விட்டார் விஜய். இன்று அவரது அரசாணை, ஒட்டுமொத்த விவசாயிகளுக்கும் வலி ஏற்படுத்தி இருக்கிறது.

**ஒவ்வொரு நாளும் விஜய்யின் அரிதாரம் கலைந்து கொண்டே வருகிறது.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று அவரது இல்லத்தில் தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, பக்ரீத் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவோம்!

### பகுதிக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

### தி.மு.தனியரசு ஆலோசனை!

சென்னை, மே.28-

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவுறுத்தலின்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் 27.5.2026 புதன்கிழமையன்று மாலை 5.00 மணிக்கு திருவொற்றியூர் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் வட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், சாந்தி பக்தன், இரா.முருகேசன், எம்.வி. குமார், கே.பிரபாவதி, ஆர். குமரேசன், த.கார்த்திகேயன், எம்.எல்.சரவணன், எஸ். தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ. சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், எகா. கார்த்திகேயன், ஆர்.ரஜினி பாபு, ஒய்.ரஜினிநந்தி, பி.எஸ்.சைலஸ், கே.கார்த்திகேயன், அப்துல் சலிம் மற்றும் மாவட்ட பகுதி அணியின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பொருள் : ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா,

வட்டங்கள் தோறும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் ஆட்சியில் மின்வெட்டு தொடர் துண்டிப்பு கண்டித்தும் த.வெ.க. கட்சியின் நிர்வாகிகள் மின்சாரத்துறை அதிகாரி நள்ளிரவில் வீட்டிற்கு சென்று மிரட்டல் விடுத்ததை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

கழக ஆக்க பணிகள் குறித்தும் ஆலோசிக்கப் பட்டது.

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; தூய சக்தி, தூய சக்தி என்று மேடைதோறும் மார்தட்டிக்கொண்டவர்கள், இப்போது குதிரை பேரம் என்னும் தீய செயலை ஊக்கப்படுத்தலாமா ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; அன்று சொன்னது ' வேற வாய்'; இன்றோ ' .... வாய்' என்றுதானே நினைக்கத் தோன்றுகிறது !**

### தமிழ்நாட்டில் முறையான கொள்கை இல்லாமையால் குற்றங்கள் அதிகரிப்பு!

# குற்றச் செயல்களை தடுப்பதில் த.வெ.க. அரசு தோல்வி !

### காவல்துறை அதிகாரிகளே குற்றச்சாட்டு; 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு படப்பிடிப்பு!

**சென்னை, மே 28-**

**"தமிழ்நாட்டில் குற்றச் செயல்களை தடுப்பதில் த.வெ.க. அரசு தோல்வி அடைந்துள்ளது" என்று காவல்துறை அதிகாரிகளே குற்றஞ்சாட்டியுள்ளனர். முறையான கொள்கை இல்லாததால் குற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதுகுறித்து "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேட்டில் கூறப்பட்டிருப்பதாவது:-**


15 DAYS OF TVK GOVT:
POLICING LAGS, CRIMES SURGE
Anti-Social Elements Run Amok In The Absence of Major Crackdowns As Crucial Postings In The Dept Are In Limbo
2 WEEKS, 28 MURDERS
Indecision over postings leaves cops idling

டி.வி.கே. அரசின் முதல் இரண்டு வாரங்களில், மாநிலத்தில் மூன்று இரட்டைக் கொலைகள் உட்பட 28 கொலைகளும், கோயம்புத்தூரில் 10 வயது சிறுமி கடத்தப்பட்டு, பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான 40 குற்றங்களும் பதிவாகியுள்ளன.

மே 10 முதல் மே 25 வரை தொகுக்கப்பட்ட காவல்துறை தரவுகளின்படி, குடிபோதையில் ஏற்பட்ட சண்டைகளால் எட்டு கொலைகள், ஏழு பழிவாங்கும் கொலைகள், எட்டு உணர்ச்சி வசப்பட்ட கொலைகள், ஆதாயத்திற்காக இரண்டு கொலைகள், திடீர் ஆத்திரமூட்டலால் இரண்டு கொலைகள், ஒரு பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை மற்றும் தீர்க்கப்படாத ஒரு வழக்கு ஆகியவை பதிவாகியுள்ளன.

இதே காலகட்டத்தில், தமிழ்நாடு முழுவதும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான 40 குற்றங்களும், 13 போதைப் பொருள் தொடர்பான வழக்குகளும் பதிவாகியுள்ளன.

**அரசு தோல்வி!**

இவை மாநிலத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளன. புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பதிலும், குற்றத் தடுப்பிலும், பெரும் குற்றங்களுக்குத் தகுந்த முறையில் பதிலளிப்பதிலும் அரசு தோல்வியடைந்துள்ளதாக, பணியில் உள்ள மற்றும் ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரிகள் கடுமையாகச் சாடியுள்ளனர்.

பதிவான முக்கிய சம்பவங்களில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மே 12 அன்று ஓய்வுபெற்ற ராணுவ வீரரான 62 வயது செல்லப்பன் மற்றும் அவரது மகனும் ராணுவ வீரருமான 43 வயது மகேஷ்குமார் ஆகியோர் கொலை செய்யப்பட்டதும் அடங்கும். இந்தக் கொலைகள் தொடர்பாக மகேஷ்குமாரின் மனைவி, 38 வயது பானுப்ரியா மற்றும் அவரது கூட்டாளியான 24 வயது பூவரசன் ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

மே 17 அன்று, தாம்பரம் அருகே வரதராஜபுரத்தைச் சேர்ந்த கானா பாடகர்களான பரத் குமார் (24) மற்றும் சீனிவாசன் (23) ஆகியோர் படபையில் உள்ள ஒரு வீட்டிற்குள் கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டனர். பின்னர் போலீசார் பல சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

**மாநிலத்தையே உலுக்கிய கோவை சம்பவம்!**

கோயம்புத்தூர் அருகே சூலூரில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் மாநிலத்தையே உலுக்கியுள்ளது.

ரவுடிகள் மற்றும் சமூக விரோதச் செயல்களைக் கண்காணிக்க, காவல்துறை மனித உளவுத் தகவல்களைச் சேகரிக்கும் முறையை வலுப்படுத்த வேண்டும் என்றும், பாரம்பரிய கண்காணிப்பு முறைகளை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்றும் முன்னாள் டிஜிபி போலோநாத் கூறினார்.

தொடர்பு கொண்டபோது, தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் சந்தீப் ராய் ரத்தோர் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டார்.

கரூர் மாவட்டத்திலிருந்து 18 காவலர்கள் மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதால், சீருடைப் படையினரிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது. ரவுடிகள் தொடர்பான கொலைகள் மற்றும் பழிவாங்கும் தாக்குதல்களைத் தடுக்க, காவல்துறை கண்காணிப்பைத் தீவிரப்படுத்தலாம் என்று அவர் கூறினார்.

இவ்வாறு 'டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேட்டில் கூறப்பட்டுள்ளது.